# <u>தங்கம் நுகர்வோர் பிரச்சினைகள்</u>

தமிழ்நாடு அரசு, உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலம் 5.7.2008 அன்று தங்கம் குறித்த நுகர்வோர் பிரச்சினைகள் என்ற தலைப்பில் சென்னை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் கூட்டரங்கில் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. அக்கருத்தரங்கின் நடவடிக்கைகள்:

தமிழ்நாடு, உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, வணிகர்கள் சொந்த லாபத்திற்காகவும், சுயநலத்திற்காகவும் முறையற்ற வணிக நடைமுறைகளால் நுகர்வோரை ஏமாற்றுவதை தடுக்கவும், நுகர்வோர்கள் வணிகர்களால் பல பிரச்சினைகளை சந்திப்பதை தீர்த்து வைக்கவும் அரசுக்கும், நுகர்வோருக்கும் இணைப்பு பாலமாக செயல்பட்டு நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதற்காக நுகர்வோர் அமைப்புகளுடனான காலமுறை கூட்டங்களை நடத்தி நுகர்வோர்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வருகிறது. மேலும் இத்துறை மருந்துகள், கடன் அட்டைகள், செல்போன், நேர்மையற்ற வணிக நடைமுறை போன்ற் கருத்தரங்குகள் நடத்த ஏற்பாடு செய்து நுகர்வோர்கள், நுகர்வோர் அமைப்புகள் மற்றும் தொடர்புடைய அலுவலர்களை அழைத்து கருத்தரங்குகளை நடத்தி நுகர்வோர்களுக்கு உள்ள பிரச்சினைகளை தீர்க்க, அதற்கான ஆலோசனைகளையும் பெற்று அரசுக்கு பரிந்துறை அனுப்பியுள்ளது.

அதேபோன்று தற்போது தங்கம் வாங்கும்போது நுகர்வோர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வு குறித்து ஆலோசிக்கப்பட்டு அதற்கு இந்திய அரசின் ஹால்மார்க் முத்திரையிடப்பட்ட தங்கம் வாங்குதல் மூலம் தீர்வு காணப்பட்டுள்ளது. பல ஆயிரம் ஆண்டுகளாக தங்கம் மதிப்புமிக்கதாகவும், நகைகளாக தயாரிக்கப்பட்டு அனைவரும் பயன்படுத்தும் அணிகலனாகவும் இருந்து வருகிறது, பெரும்பாலான நாடுகளில் ரிசர்வ் வங்கி இருப்பு வைத்துள்ள தங்கத்தின் மதிப்பை வைத்து அந்நாட்டின்

பொருளாதார நிலை கணிக்கப்படுகிறது. ஆயினும், உலக அளவில் பண பரிமாற்றம் தங்கத்தின் மதிப்பை பொறுத்து அமைவதில்லை என்றாலும், மக்களுக்கு தங்கத்தின் மீதுள்ள மோகம் குறையவில்லை, தங்கம் நமது அன்றாட வாழ்வில் முக்கிய பங்காற்றி வருகிறது.

எனவே, இந்த துறை 5.7.2008 அன்று "தங்கம் நுகர்வோர் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடத்தியது. அக்கருத்தரங்கின் நடவடிக்கைகள் பின்வருமாறு.

## வரவேற்புரை

திருமதி. ச. கங்காபாய், துணை ஆணையர் (நகரம்) தெற்கு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அவர்கள், தங்கம் குறித்த கருத்தரங்கில் கலந்து கொண்ட தங்க வணிகர்கள் நுகர்வோர் அமைப்பு பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்று, இக்கருத்தரங்கு நடைபெறுவதன் காரணத்தையும் எடுத்துரைத்தார்.

## தலைமை உரை:

உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் ஆணையாளர் திரு. கோ. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் கருத்தரங்கில் ஆற்றிய தலைமை உரையில், நம் அன்றாட வாழ்க்கையில் தங்கத்தின் பயன்பாடு குறித்தும், தங்கத்தின் தரம் குறித்தும் விளக்கினார். ஒரு நாடு தங்கத்தினை வைத்து பணம் பெறுவதற்கும், மீண்டும் அந்த பணத்தை செலுத்தி மீட்கவும் கூடிய நிலையான மதிப்புள்ள பொருளாக உள்ளது. எனவே இதத்கைய மதிப்புடைய தங்கத்தை நுகர்வோர் வாங்கும்போது விழிப்புணர்வுடன் பார்த்து வாங்க வேண்டும். அதிகமான நுகர்வோர் இதில் விழிப்புணர்வுடன் இல்லை எனவும், நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகளில் விழிப்புணர்வுடன் இல்லாததால் எளிதில் ஏமாற்றப்படுகின்றனர். எனவே இதுகுறித்து கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ள பிரதிநிதிகளிடம் நுகர்வோர் நிறைய சந்தேகங்களை

கேட்டு தெளிவு பெற வேண்டும் எனவும், தரமான தங்கம் மற்றும் ஹால்மார்க் தங்கம் குறித்தும் விளக்கம் பெற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

<u>சிறப்புரை:</u>

இந்திய தர நிர்ணய அமைவனம், துணைத்தலைவர் (தெற்கு மண்டலம்) திரு.கே. அன்பரசு அவர்கள், தனது சிறப்புரையில், நுகர்பொருளில் இந்திய தர நிர்ணயம் அமைவனம் நுகர்பொருள் மீது நிர்ணயித்துள்ள ஒழுங்குமுறை அளவீடுகள் குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்தும் கூறினார். BIS தேசிய அளவில் தர நிர்ணயம், சான்றளித்தல் மற்றும் தரப்பரிசோதனை செய்வதால் நாட்டின் வளர்ச்சியையும், உற்பத்தியில் முன்னேற்றத்தையும், ஏற்றமதியையும் உருவாக்குகிறது. தரக்குறைவான பொருட்களால் ஏற்படும் எதிர்விளைவுகளால் உயிருக்கு ஏற்படும் விபரீதங்களை தடுக்க எரிவாயு அடுப்பு, எல்.பி.ஜி சிலிண்டர், மின்சாதன பொருள் ஆகியவற்றிற்கு BISன் கீழ் ISI தரச்சான்று கட்டாயமாக்கப்பட்டு சான்று அளிக்கப்படுகிறது. மேலும் சில நுகர்பொருள்களையும் BISன் தர நிர்ணய அதிகாரத்தின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் கூறினார்.

<u>**BISன் ஹால்மார்க் தர நிர்ணயம் குறித்த விளக்கவுரை:**</u>

திரு. T.B. நாராயணன், இயக்குநர் (தெற்கு மண்டலம்) மற்றும். மண்டல ஹால்மார்க் ஒருங்கிணைப்பாளர், BIS அவர்கள் ஹால்மார்க் தங்கம் குறித்த தனது உரையில் முத்திரையிடப்பட்ட ஹால்மார்க் தங்கம் என்பது தங்கம் வாங்கும் நபர், தான் கொடுக்கும் பணத்திற்கு தரமுடைய தங்க நகைபெற BIS மூன்றாம் நபராக தானாக முன்வந்து இந்திய தர நிர்ணய அமைவன சட்டம் **1986** ல் ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார். இது குறித்து மேலும் தனது உரையில், நமது நாட்டில் தங்கம் உற்பத்தி **4** மெ.டன் உள்ளது. நுகர்வு **880** டன் ஆகும். இதில் **650** டன் இறக்குமதி செய்யப்படுகிறது.

மீதி பழைய நகைகள் நுகர்வோர்களால் விற்பனை செய்யப்படுவதால் மறுசுழற்சியில் கிடைப்பதாகும். தங்க ஆபரணங்களாக 80% பயன்படுத்தப் படுகிறது. 15% முதலீடாகவும், தொழிற்சாலை பயன்பாட்டிற்காக 5% பயன்படுத்தப் படுகின்றன. மேலும் நுகர்வோரிடையே நம்பிக்கையை வளர்க்கவும், தங்க நகைகளின் மீது நம்பிக்கை ஏற்படுத்தவும் ஒழுங்குமுறை ஏற்படுத்தப்பட்டால்தான் நுகர்வோருக்கு சிறப்பான சேவை அளிக்க முடியும் என்றார்.

மேலும் குறிப்பிடுகையில், ஹால்மார்க் என்பது தங்கத்தின் அளவு, உத்தரவாதம், தூய்மை போன்ற சரியான அடையாளம் காட்டும் முத்திரையாகும். இதனை நகை வியாபாரிகளுக்கு சான்று அளித்தும், தயாரிப்பாளர்களின் நகைகளை சோதனை செய்தும் வழங்குகிறது. இந்த ஹால்மார்க் 5 வகைகளாக தரமிட்டு அளிக்கப்படுகிறது.

(1) BIS Mark
(2) 916 சுத்தமானது
(3) Centre Mark
(4) வருடம் குறியீடு
(5) நகைக்கடை முத்திரை

நகைகளில் தங்கத்தின் தர அளவு காரட் என்ற பெயரில் கீழ்க்காணும் அளவுகளில் உள்ளன. அவை யாவன 23, 22, 20, 18, 17, 14 மற்றும் 9 காரட். இதனை நகைகடைகாரர்கள் குறிப்பிடுவார்கள்.

நகை விற்பனையாளர்கள் கண்டிப்பாக நுகர்வோர் பார்க்கும்படி கீழ்காணும் விவரங்கள் குறித்த அறிவிப்பு பலகை வைக்க வேண்டும்.

1. நகை விற்பனையாளருக்கு BIS ஆல் வழங்கப்பட்ட பதிவு எண் (7 இலக்கங்கள் கொண்டது)
2. ஒவ்வொரு தங்க ஆபரணத்திலும் ஹால்மார்க் முத்திரை (பிரிக்கக்கூடிய ஒவ்வொரு ஆபரண பகுதியிலும் இருக்க வேண்டும்)

ஹால்மார்க் குறித்து மேலும் விவரங்கள் பெற இணைய தளம் www.bis.org.in ல் பார்த்து பயனடையுமாறும் கேட்டு கொண்டார்.

**<u>விலை உயர்ந்த கற்கள் வாங்குதல்</u>**

திரு. சுல்தான் முகைதின் விலை உயர்ந்த கற்கள் குறித்து விளக்கும்போது 2000 வகையான கற்கள் இருப்பதாகவும், மாணிக்க கற்கள் சோதனை செய்வது குறித்த தொழில்நுட்பம் குறித்தும் ஒவ்வொரு கல்லுக்கும் தனிப்பட்ட முறையில் வெவ்வேறாக சோதனை செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டார். மாணிக்க கல் அழகானது, நீண்ட காலம் இருக்கக்கூடிய மற்றும் அரிதாக கிடைக்கக் கூடிய கல் என்பது அனைவருக்கும் தெரியும் என்றார்.

**<u>தங்க நகை கடைகளில் சோதனை செய்தல்</u>**

திரு. ஜேம்ஸ் ஜோஸ், செயலாளர், இந்தியன் அசோசியேஷன் ஹால்மார்க்கிங் சென்டர் என்பவர் நகைகடைகளில் தங்க நகைகள் சோதனை செய்தல் குறித்து வீடியோ காட்சி காட்டி ஹால்மார்க் நகை எவ்வாறு சோதிக்கப் படுகிறது எனவும் விளக்கினார். நுகர்வோருக்கு தங்கம் தரமானதாக அளிக்க ஹால்மார்க் நகைகள் எவ்வாறெல்லாம் சோதித்து கண்டறியப்படுகிறது என்பதையும் கூறினார்.

**<u>அமர்வு 1:</u>**

தங்கம் வாங்கும்போது நுகர்வோர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் நுகர்வோரை பாதுகாக்க தீர்வு:-

திருமதி. ஷோபா அய்யர், சிட்டிசன் கன்சூமர் மற்றும் சிவிக் ஆக்ஷன் குரூப், சென்னை, திரு. T.B. நாராயணன், மண்டல ஹால்மார்க்கிங் ஒருங்கிணைப்பாளர் (தெற்கு மண்டலம்). திரு. ஜேம்ஸ் ஜோஸ், செயலாளர், இந்தியன் அசோசியேஷன் ஹால்மார்க்கிங் சென்டர்ஸ், திரு, ஜாபர், மெட்ராஸ் ஜீவல்லர்ஸ் டைமண்ட் அசோசியேஷன், திரு. T. சடகோபன், துணை தலைவர், தமிழ் நாடு முன்னேற்ற நுகர்வோர் மையம்

ஆகியோர் கலந்து கொண்டு பார்வையாளர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

இந்த அமர்வில் திரு. T. சடகோபன், துணை தலைவர், தமிழ் நாடு முன்னேற்ற நுகர்வோர் மையம் என்பவர் ஹால்மார்க் நகைகள் அனைத்தும் அரசால் சான்றளிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட வேண்டும் என அரசை கேட்டுக் கொண்டார். அதற்கு திரு. T.B. நாராயணன், மண்டல ஹால்மார்க்கிங் ஒருங்கிணைப்பாளர் அவர்கள் இதுகுறித்த Mandatory Certification Act கொண்டு வருதல் தொடர்பாக இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளதாக தெரிவித்தார்.

ஒரு நுகர்வோர் அமைப்பை சார்ந்த பிரதிநிதி, ஹால்மார்க் நகைகள் குறித்து நகைகளில் BIS மூலம் ஆய்வு செய்ய கள ஆய்வாளர்கள் உள்ளார்களா என்று கேட்டதற்கு திரு. T.B. நாராயணன், மண்டல ஹால்மார்க்கிங் ஒருங்கிணைப்பாளர் அவர்கள் வழக்கமாக நகைகடைகளை ஆய்வு செய்யப்படும்போது ஹால்மார்க் நகை ஆய்வு செய்து வருவதாக தெரிவித்தார்.

ஒரு நுகர்வோர் தனது ஆலோசனையில் நகை கடைக்காரர்கள் சேதாரம் கழிப்பதை தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதற்க திரு. ஜாபர், மெட்ராஸ் டைமண்ட் அசோசியேஷன் அவர்கள் நகை தயாரிக்கும்போது ஒவ்வொரு வகையான நகைக்கும் அதன் மாடல் பொருத்து சேதாரம் ஏற்பகிறது. எனவே இதனை தவிர்க்க இயலாது என தெரிவித்தார். மேலும் நுகர்வோர் தங்க நகை வாங்கியதில் நகை தரத்தில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அசோசியேஷனில் முறையிடலாம் என தெரிவித்தார். மேலும் நுகர்வோர் தங்க நகை வாங்கும்போது விழிப்புணர்வுடன் தரத்தை உறதி செய்து நகைக்கடைகளிலிருந்து வாங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## அமர்வு II

## ஹால்மார்க் குறித்து அரசு ஒழுங்குமுறைகள்

திருமதி. நிர்மலா தேசிகன், CAI. சென்னை, திரு. T.B. நாராயணன், மண்டல ஹால்மார்க்கிங் ஒருங்கிணைப்பாளர் (தெற்கு மண்டலம்). திரு. ஜேம்ஸ் ஜோஸ், செயலாளர், இந்தியன் அசோசியேஷன் ஹால்மார்க்கிங் சென்டர்ஸ், திரு, ஜாபர், மெட்ராஸ் ஜீவல்லர்ஸ் டைமண்ட் அசோசியேஷன், திரு. பால்பர்னயிஸ், மாநில துணை தலைவர் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு ஆகியோர் இரண்டாவது அமர்வில் கலந்து கொண்டனர்.

இந்த அமர்வில் திருமதி. நிர்மலா தேசிகன், CAI. சென்னை அவர்கள் எந்த பொருள் வாங்கினாலும் பில் வாங்க வேண்டும் என்றும், நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் வழக்க தொடர பில்தான் அடிப்படை ஆதாரம் எனவும் தெரிவித்ததுடன், நுகர்வோர்கள் பில் வாங்க தயங்கும் நிலையை மாற்றிக்கொண்டு பில் கட்டாயம் வாங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

திரு. T.B. நாராயணன், மண்டல ஹால்மார்க்கிங் ஒருங்கிணைப்பாளர் அவர்கள் தங்க நகைகள் வாங்கியபின் சந்தேகப்பட்டால் தங்க நகை சோதிக்கும் மையங்களில் சோதித்து தரம் சரியார்க்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

திரு. பால்பர்னயிஸ், மாநில துணைத் தலைவர் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு அவர்கள் BIS செயல்பாடுகள் அனைத்து பொதுமக்களுக்கும் சென்றடைய வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

## கருத்தரங்கு பற்றிய தொகுப்புரை

மேற்கண்ட அமர்வுகளுக்கு பின், உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் அலுவலகம், நுகர்வோர் பாதுகாப்பு பிரிவு திருமதி.

J. விஜயதிலகம், உதவியாளர் அவர்கள் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட அனைத்து பிரச்சினைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி, கீழ்கண்ட பரிந்துரைகளையும் தொகுத்து வழங்கினார்.

<u>பரிந்துரைகள்</u>

- ஹால்மார்க் நகைகளும் சோதனை (Mandatory Certificates) உறுதி சான்று BIS னால் வழங்கப்பட்டு பின்னரே நகைகடையில் விற்பனை செய்ய வேண்டும்.
- BIS திடீர் சோதனைகள் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் செய்திதாள்களில் வெளியிட வேண்டும். அவ்வாறு வெளியிடும்போது முறையற்ற வணிக நடைமுறை மேற்கொள்ளும் வணிகர் அடையாளம் காணப்பட்டு, நேர்மையான வணிகரிடம் நுகர்வோர் வாங்க இயலும்.
- சேதாரம், செய்கூலி போன்ற கட்டணங்களுக்கு நியாயமான அளவீடுகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.
- விலை உயர்ந்த கற்கள் பதித்த நகைகள் வாங்கும்போது எப்படி நுகர்வோர் வாங்கவேண்டும் என BIS நுகர்வோர் விழிப்புணர்வு கல்வி அளிக்க வேண்டும். அதாவது கற்களுக்குரிய சரியான எடையை நகையின் மொத்த எடையில் கழித்து தங்கத்தின் எடையை கணக்கிட்டு விலை கணக்கிட வேண்டும். காரணம் கற்களுக்கு தனியாக விலை போடப்படுவதால் கல் எடை கழிக்கப்பட வேண்டும்.
- ஹால்மார்க்கிங் லைசன்ஸ் நடைமுறைகள் எளிதாக்கப்படுவதுடன், அதற்கான வசூலிக்கும் வைப்புத் தொகைகளும் குறைக்கப்பட வேண்டும்.
- ஹால்மார்க் சோதனை நிலையங்களை BIS அதிகப்படுத்த வேண்டும். இதனால் நகை கடையாளர்கள் சோதனை செய்து கொள்ள எளிதாக ஆவதுடன், நுகர்வோர்களும் சந்தேகம் ஏற்படும்போது எளிதில் சோதித்துக் கொள்ள ஏதுவாகும்.

- 5 வகையான தரங்களை கொண்ட ஹால்மார்க் முத்திரை நகையில் பதிக்கும்போது உண்மையான எடையையும் அதில் பதிக்க வேண்டும்.

**<u>நன்றியுரை</u>**

கருத்தரங்கு தொகுப்புரைக்குப் பின், திரு. S. விஜயன், உதவி ஆணையர், சைதாப்பேட்டை அவர்கள் நன்றி கூற, தேசிய கீதத்துடன் கருத்தரங்கு இனிதே முடிவுற்றது.